செ.வெ.எண்: 817 நாள்: 02.12.2019

**வட்டார அளவிலான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள் அமைப்பதற்கு அரசு மானியம் வழங்கப்படுகிறது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் வட்டார அளவிலான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள் அமைப்பதற்கு அரசு மானியம் வழங்கப்படுகிறது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

வேளாண் பணிகளில் போது, அதற்கான இயந்திரங்கள் கருவிகளை சொந்தமாக வாங்க இயலாத விவசாயிகள் அவற்றை வாடகைக்குப் பெற தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில் நிகழ்வாண்டில் 3 மையங்கள் அமைக்க ரூ.30.00 இலட்சம் நிதியை தமிழக அரசு ஒதுக்கியுள்ளது.

வேளாண் பொறியியல் துறையின் மூலம் வட்டார அளவிலான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளுக்கான வாடகை மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.ரூ.25 லட்சம் மதிப்பில் வட்டார அளவிலான ஒரு வாடகை மையம் அமைத்திட 40 சதவீத மானியம் என்ற அடிப்படையில் அதிகபட்சமாக ரூ.10 லட்சம் வரை மானியம் அளிக்கப்படும்.

இவ்வாறான மையங்களை அமைத்திட முன்னோடி விவசாயிகள், விவசாய சுய உதவி குழுக்கள் மற்றும் தொழில் முனைவோர் போன்றோர் முன்வரலாம். இவ்வாடகை மையங்களுக்கு தேவைப்படும் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை அந்தந்த பகுதிகளில் சாகுபடியாகும் பயிர்கள், மண்ணின் தன்மை, வேலையாட்கள் பற்றாக்குறை ஆகியவற்றினை கருத்தில் கொண்டு இம்மையங்களை நடத்த முன்வருபவர்கள் தேர்வு செய்து கொள்ளலாம்.

இவ்வாறான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகை மையங்களை அமைக்க முன்வருபவர்கள் வேளாண்மைப் பொறியியல் துறையினால் அனுமதிக்கப்பட்ட நிறுவனங்களின் இயந்திரங்களிலிருந்து தங்களின் விருப்பத்தின் அடிப்படையில் தேர்வு செய்து கொள்ளலாம்.

மொத்த மானியத் தொகையில் பொதுப் பிரிவினருக்கு ரூ.5.00 இலட்சமும், ஆதி திராவிட பிரிவினருக்கு ரூ.3.00 இலட்சமும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் பயனாளியின் "மானிய இருப்பு நிதி கணக்கில் " 2 ஆண்டுகளுக்கு இருப்பில் வைக்கப்படும். மீதித் தொகை பயனாளியின் சேமிப்பு வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும். 2 ஆண்டுகளுக்கு பின் பயனாளிக்கு மானியத்தில் வழங்கப்பட்ட வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர் (வேபொ) அவர்கள் சரிபார்த்த பிறகு மானிய இருப்புத் தொகை பயனாளியின் வங்கிக் கணக்கில் திரும்ப வழங்கப்படும்.

இவ்வாறான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகை மையம் அமைக்க விரும்புவோர் உடனடியாக வருவாய் கோட்டத்தில் உள்ள வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தை அணுகி பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் புதுக்கோட்டை அலுவலக தொலைபேசி எண் 04322-221816 என்ற எண்ணிற்கும், சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர் புதுக்கோட்டை 95005 88125 என்ற கைபேசி எண்ணிற்கும், உதவி செயற்பொறியாளர் அறந்தாங்கி 90803 43110 என்ற கைபேசி எண்ணிற்கும், தொடர்பு கொண்டு பயனடையலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**